# செம்பதாகை

மலர்: 2
இதழ்: 2
மாசி
1980
விலை சதம்: 60

புரட்சிகர வெகுஜன ஏடு


# மக்களை வாட்டி வதைக்கும் விலை ஏற்றங்கள் ஏன்?

நாட்டு மக்களின் அன்றாட உணவுப் பொருட்களும், அத்தியாவசியப் பாவனைப் பொருட்களும், மக்கள் எதிர்பாராத அளவுக்கு தாராள விலை உயர்வைப் பெற்றுள்ளன. இவ்விலை உயர்வுகள் குறைக்கப்படுவதற்கான எவ்வித அறிகுறியும் இல்லாத அதே வேளை தொடர்ந்தும் விலை உயர்வுகள் ஏற்படமாட்டாது என்பதற்கான உத்தரவாதமும் இல்லை. இந்நிலையில் மக்களை வாட்டி வதைக்கும் விலை உயர்வுக்கான காரணத்தை மக்கள் தெரிந்துகொள்வதும், அவற்றுக்கு எதிராக உறுதிமிக்க எதிர்ப்பு இயக்கத்தை உருவாக்கி முன்னெடுத்துச் செல்வதும் அவசியமாகி உள்ளது.

## விலைவாசி உயர்வுக்கு எதிரான இயக்கத்தில் மக்கள் அணிதிரள வேண்டும்

யூ. என். பி. அரசாங்கம் பதவிக்கு வந்த இரண்டரை ஆண்டுகளில் படிப்படியாக மக்களுக்கு இருந்துவந்த மானியங்கள் வெட்டப்பட்டு வந்துள்ளன. அதேவேளை அத்தியாவசியப் பாவனைப் பொருட்களினதும், அன்றாட உணவுப் பொருட்களினதும் விலைகள் புயல்வேகத்தில் உயர்த்தப்பட்டு வந்துள்ளன. இவ்விலை உயர்வுக்கு எண்ணெய் உற்பத்தி நாடுகளின் எண்ணெய் விலை உயர்வும், உள்நாட்டில் அபிவிருத்திக்கான தமது திட்டங்களும், சர்வதேச சந்தையில் மா, சீனி போன்றவற்றின் விலை உயர்வுகளும்தான் பிரதான காரணங்களாக அரசாங்கத்தால் பிரசாரம் செய்யப்படுகின்றது. மேற்கூறியவற்றில் அற்ப சொற்ப காரணங்கள் இருந்தபோதிலும் விலையுயர்வுக்கு உண்மைக்காரணமான தனது தவறான பொருளாதாரக் கொள்கை என்பதை அரசாங்கம் மூடிமறைத்துள்ளது.

நமது நாட்டின் விலை உயர்வின் முக்கிய காரணியாக இருப்பது நமது நாணயத்தின் மதிப்பு மிகமிகத் தாழ்ந்த மட்டத்திலேயே உள்ளது. உதாரணமாக இந்திய நாணயத்திற்கு சமமாக சில காலத்திற்கு முன்பிருந்த நமது நாணயம் இன்று இந்திய நாணயத்தின் சரி அரைவாசிக்குக் கீழ் குறைக்கப்பட்டுள்ளது. இந்நாணய மதிப்பிறக்கம் உலகவங்கி, சர்வதேச நாணயசபை போன்ற அமெரிக்க நிதிநிறுவனங்களின் வற்புறுத்தலுக்கு இணங்கவே செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் மேற்கத்தைய ஏகபோக முதலாளித்துவ நாடுகள் தமது பொருட்களுக்கு கூடிய விலையையும் அதேவேளை நமது ஏற்றுமதிப் பொருட்களுக்கு குறைந்த விலையையும் நிர்ணயிப்பதற்கு வழி வகுத்துள்ளன. இதனால் நாம் இறக்குமதியாக்கும் உணவுப் பொருட்களும் சரி, பாவனைப் பொருட்களும் சரி, கூடிய விலைகளே கொடுக்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

அடுத்த காரணம் கட்டுப்பாடற்ற அரசின் இறக்குமதிக் கொள்கையாகும். இக்கட்டுப்பாடற்ற இறக்குமதிக் கொள்கை அந்நிய ஏகபோக முதலாளித்துவத்திற்கு பெரும் சேவையைச் செய்யும் அதே வேளை உள்ளூர்ப் பெரு முதலாளித்துவத்திற்கு பெரும் கொண்டாட்டத்தையும் அளித்துள்ளது. இதனால் உள்ளூர் உற்பத்திகள் யாவும் நாசமடைந்துள்ளன. சிறு கைத்தொழில்களும், உப-உணவுப் பொருட்களின் உற்பத்தியாளர்களினதும் கழுத்துக்கள் நெரிக்கப்பட்டுள்ளன. இதை பெருமுதலாளிகளின் கட்சியான யூ. என். பி. அரசு அப்பட்டமாகவே செய்துள்ளது. ஆனால் அதன்மூலம் ஏற்பட்டுள்ள பாரதூரமான விளைவை சாதாரண மக்களே சுமக்கவேண்டியுள்ளது.

சர்வதேச ஏகபோக முதலாளித்துவம் இன்று தத்தமது சொந்த நாடுகளிலேயே பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளன. தமது வளர்ந்துவரும் நெருக்கடிகளுக்கு தீர்வோ, மார்க்கமோ காண முடியாத நிலையில் அவை மேன் மேலும் நமது நாடுபோன்ற வளர்முக நாடுகளான மூன்றும் உலக நாடுகளைச் சுரண்டுவதிலும்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை பற்றிப் பேச இந்திராவுக்கு உரிமையில்லை!

இந்திராகாந்தி கடந்த தேர்தல் நேரத்தில் ஒரு சந்தர்ப்பத்தில் பேசும்போது ''தான் பதவிக்கு வந்ததும் இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் தலையிடப்போவதாக' கூறிய செய்தியைப் பத்திரிகைகள் அப்போது வெளியிட்டன. இப்பொழுது இந்திராகாந்தி பதவிக்கு வந்துவிட்டார். அவர் பதவி ஏற்றபின் இங்கிலாந்தை தலைமையகமாகக்கொண்டு வெளிநாடுகளில் தமிழ் ஈழத்திற்கான இயக்கத்தை நடாத்திவரும் தமிழர் இணைப்புக்குழுவின் சார்பாக திரு. வைகுந்தவாசன் என்பவர் புதுடில்லிக்குப் பறந்துசென்றார். அங்கே இந்திராகாந்தியை வாயார வாழ்த்திவிட்டு இலங்கைத் தமிழரின் பிரச்சினை பற்றிய ஒரு மகஜரையும் கையளித்து தவறாது இலங்கைத் தமிழரின் பிரச்சினையில் இந்திராகாந்தி தலையிடவேண்டும் எனவும் வேண்டிக்கொண்டார். இந்திராகாந்தி அந்த மகஜரை பூரிப்புடன் பெற்றுக்கொண்டு மகஜர் சம்பந்தமாக வைகுந்தவாசனுடன் கலந்துரையாடியும் உள்ளார். அப்படியாயின் தான் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தலையிடப்போவதை இந்திராகாந்தி உறுதிப்படுத்தியுள்ளதையே இது எடுத்துக்காட்டுகின்றது. இங்கு

(4-ம் பக்கம் பார்க்க)

# மலையகப் பாட்டாளி வர்க்கம் புரட்சிகர அரசியல் மார்க்கத்தில் அணிதிரள வேண்டும்!

## அட்டன் கருத்தரங்கில் இடது கம்யூனிஸ்ட் தலைமைத் தோழர்கள் உரை

தேசியரீதியில் மோசமான பொருளாதார நெருக்கடிகளும், அடக்குமுறைகளும் அதிகரித்துவரும் அதேவேளை சர்வதேசரீதியில் யுத்தக் கெடுபிடிகளும் ஆக்கிரமிப்பு அச்சுறுத்தல்களும் நாளாந்தம் வளர்ந்துவருகின்றன. இத்தகைய சூழ்நிலையில் நமது நாட்டின் தொழிலாளி வர்க்கமும் ஏனைய உழைக்கும் மக்களும் நாட்டின் விடுதலைக்கான சரியான மார்க்கத்தில் தம்மை அணிதிரட்டிக்கொள்வது அவசியமாகும், நமது நாட்டின் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் தோட்டத் தொழிலாளர்களின் பங்கு மிகவும் அவசியமானதொன்றாகும். இந்தஅவசியத்தை உணர்வதாலேயே எமது கட்சி மலையகத்தொழிலாளர்களின் மத்தியிலான அரசியல் வேலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றது.

மேற்கண்டவாறு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) தலைமைத் தோழர்களில் ஒருவரான தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் அட்டனில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசும்போது கூறினார். அட்டன் செற்றிக் மண்டபத்தில் ''மலையக — இதர தேசியப் பிரச்சினைகளும், சர்வதேச நிலைமையும்'' என்னும் தலைப்பில் தோழர் பி. சுப்பிரமணியம் தலைமையில் மேற்படி கருத்தரங்கு நடைபெற்றது.

கருத்தரங்கில் மேலும் தோழர் சுப்பிரமணியம் பேசுகையில் சர்வதேசரீதியில் இரு மேலாதிக்க வல்லரசுகளின் ஆதிக்கப்போட்டியால் யுத்தக் கெடுபிடிகள் வலுவடைந்துள்ளன' விசேடமாகச் சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் வலுவடைந்துள்ளன. இந்நிலையில் மக்கள்சீனம் கடைப்பிடிக்கும் சரியான கொள்கைகள்தான் யுத்தக்கெடுபிடிகளையும், ஆக்கிரமிப்புக்களையும் எதிர்ப்பதற்குச் சரியான மார்க்கமாக உள்ளது. எனவே சீனமக்களோடும் அரசோடும் சேர்ந்து நாமும் உலக மேலாதிக்கத்திற்கான வல்லரசுகளின் முயற்சிகளை முறியடிப்பதற்கான வழிகளில் செயல்படவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அடுத்து தோழர் கே. செந்திவேல் பேசும்போது, மலையகப் பாட்டாளி வர்க்கமும் மக்களும் மலையகம் என்ற பிரதேச அடிப்படையிலேயோ அன்றி இந்திய வம்சாவழியினர் என்ற வட்டத்திற்குள் நின்றோ எவ்வித விமோசனத்தையும் பெறமுடியாது: பதிலுக்கு நாட்டின் ஏனைய தொழிலாளி வர்க்கத்தோடும் உழைப்பாளி மக்களோடும் இணைந்து புரட்சிகர அரசியல் இயக்கங்களையும் போராட்டங்களையும் முன்னெடுக்கத் தயாராகவேண்டும். தோட்டத் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களை நம்பி இருக்கும் ஏமாளிகள் என்ற தொழிற்சங்கத் தலைவர்களின் ஏமாற்றுக்கள் இன்று மலையகத்தில் அம்பலமாகிவரும் அதேவேளை இளைஞர்களும், தொழிலாளர்களும் தொழிலாளி வர்க்க அரசியல் இயக்கங்களை முன்னெடுத்தும் வருகின்றார்கள். இன்று மலையக

(2-ம் பக்கம் பார்க்க)

**ஒரு வர்க்கம் மற்றொரு வர்க்கத்தை அடக்கி ஆள்வதற்கான கருவியே அரசாங்கம்!**

# கருத்தும் கண்ணோட்டமும்

ஜனமகன்

## போக்குவரத்தின் நிர்க்கதி !

இன்று நாட்டின் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் மக்களின் போக்குவரத்து நிலைமை மோசமாகி உள்ளதைக் காண முடியும். பஸ் — புகையிரதச் சேவைகள் முற்றாகச் சீர் குலைந்துள்ளன என்றே கூற வேண்டும். விசேடமாகக் காலை, மாலை நேரங்களில் பஸ்களிலும், புகையிரதங்களிலும் மக்கள் நின்றுகூடப் பிரயாணம் செய்ய முடியாத அளவுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. புகையிரதங்களின் கதவுகளிலும், வெளிப்புறங்களிலும் தொங்கிக்கொண்டு மக்கள் பிரயாணம் செய்வதையே பார்க்கமுடிகின்றது. ஒரு இடத்திலிருந்து வேறு ஓரிடத்துக்குச் செல்வதற்கு மூன்று மணித்தியாலங்களுக்கு மேல் பஸ்சுக்காகக் காத்து நிற்க வேண்டியுள்ளது. இந் நிலைமைகள் பஸ் — புகையிரத சேவைகளின் சீரழிந்த நிலையையே எடுத்துக் காட்டுகின்றது. ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட ஒரு பகுதியினரின் உல்லாசத் தேவைக்காக ஆயிரக்கணக்கான ஆடம்பர மோட்டார்கள் இறக்குமதியாக்கப்படுகின்றன. ஒரு கலன் பெற்றோலில் பதினைந்து இருபது மைல்களுக்குள் வேலை செய்யக்கூடிய இந்த ஆடம்பரக் கார்களில் ஒருவர், இருவர் மட்டுமே உல்லாசப் பிரயாணம் செய்கிறார்கள். அதே வேளை மக்கள்பெரும் கூட்டம் கூட்டமாக பஸ்தரிப்பு நிலையங்களில் மணித்தியாலக் கணக்கில் பஸ்சுக்காக தூங்க வேண்டியுள்ளது. போக்குவரத்து அமைச்சரும், அதிகாரிகளும் அடிக்கடி பஸ் புகையிரத சேவைகள்பற்றிப் புள்ளி விபரங்கள் வெளியிடுகிறார்கள். ஆனால் அவை ஒன்றும் மக்களது போக்குவரத்து கஷ்டங்களை நிவர்த்தி செய்ததாகத் தெரியவில்லை. போதாக் குறைக்கு போக்குவரத்துக் கட்டணங்களையும் அரசாங்கம் உயர்த்தவுள்ளது. 'காசைக் கொடுத்து பிசாசைக் கொண்டவன்' போல் பஸ் புகையிரதக் கட்டணங்களுக்கு கூடிய தொகையைக் கொடுத்து ஒரு சிரமமற்ற ஒழுங்கான போக்குவரத்தை செய்ய முடியாத நிலையிலேயே நாட்டின் போக்குவரத்துச் சேவை உள்ளது. இந்நிலைமையைப் பாவித்து தனியார் கைகளுக்கு பஸ் சேவையை ஒப்படைக்க அரசு இரகசிய வழிகளில் செயல்படுகின்றதா என்ற சந்தேகமும் மக்கள் மத்தியில் கிளப்பப்படுகின்றது. மக்களின் அபிலாஷைகளையோ அல்லது அவர்களின் கஷ்டங்களையோபற்றி உண்மையான அக்கறை அரசாங்கத்திற்கு இருந்தால் போக்குவரத்து நிலைமை சீரழிவதற்கு இடம் இல்லை.

★

## தமிழ் ஈழத்திற்கு ஆதரவாம்!

அண்மையில் யாழ்ப்பாணம் வந்த சமசமாஜக் கட்சியின் புதிய (வாசுதேவா நாணயக்கார) இளைஞர் கோஷ்டியினர் ஒரு கூட்டத்தில் பேசும்போது தமிழ் ஈழப் போராட்டத்திற்கு தாம் ஆதரவு அளிப்பதாகப் பத்திரிகைகள் கூறின. அதாவது தமிழ் இளைஞர்களின் கேள்விக்குப் பதிலளிக்கையில் இக்கோஷ்டியினர் தனித்தமிழ் ஈழக்கோரிக்கைக்கு அமிர்தலிங்கம் சரியான போராட்டம் நடத்தவில்லை எனவும், அதற்கான சரியான போராட்டம் நடந்தால் தாம் ஆதரவு தருவோம் என்றும் கூறினார்கள். இப்புதிய சமசமாஜிகளின் கூற்றால் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லையென்றே கூறலாம். ஏனெனில் இவர்களது அடிப்படைக் கொள்கை ரொட்சிசமே அன்றி வேறு எதுவும் இல்லை. பழைய ரொட்சிசத் தலைவர்களும், கட்சிகளும் செய்த அதே வேலையைப் புதிய பெயரில் செய்கிறார்கள். அதாவது இடத்திற்குத் தக்கவாறும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறும் வெறும் மேலெழுந்த உணர்ச்சிக்காகவும் பேசுவதில் ரொட்சிசவாதிகளுக்கு நிகர் அவர்களே தான். உடனடியான அரசியல் இலாபத்திற்காக யதார்த்தமான நிலைமைகளைப் புறக்கணித்து குறுக்கு வழியால் சென்று விஷயங்களைச் சாதிக்க முயலும் இத்தகையவர்களிடமிருந்து தமிழ் ஈழக்கோரிக்கை என்ற பிற்போக்குக்கு ஆதரவு கிடைப்பது ஆச்சரியமான தொன்றல்ல. இவ்வித ஆதரவு ரொட்சிசவாதிகளிடம் மட்டுமன்றி மாக்சிசம் லெனினிசம் என்று உச்சரிப்பவர்கள் சிலரிடம்கூட இது பற்றிய சந்தேகமும் தப்பான எண்ணங்களும் உருவாகியுள்ளன. இவ்விதமான குழப்பமான கருத்துகள் நிச்சயம் உண்மையான யதார்த்த நிலைகளாலும், அவற்றைக் கவனத்தில்கொண்டு வேலை செய்யும் மாக்சிச — லெனினிசக் கொள்கைகளாலும் தோற்கடிக்கப்படும் என்பதில் ஐயமில்லை.

★

## சுருட்டுத் தொழிலாளர் நலன் காக்கும் முதலாளி?

யாழ்ப்பாணத்தில் உள்ள சுருட்டு முதலாளிகள் சுருட்டுத் தொழிலாளிகளுக்குச் செய்துவரும் அநீதிகள் ஏராளம். சம்பள நிர்ணய சபை மூலம் தீர்மானிக்கப்படும் சம்பளத்தை ஒருபோதும் தொழிலாளர்களுக்கு வழங்குவதில்லை. அண்மையில் சுருட்டுத் தொழிலாளர்கள் தமது சங்கங்கள் மூலம் ஆயிரம் சுருட்டுக்கு ஐம்பதுரூபா சம்பளம் என்பதை முன்வைத்து பெயரளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டும் இருந்தது. ஆனால் சுருட்டு முதலாளிகள் சூழ்ச்சி செய்து எப்படியும் இதை முறியடிக்க முடிவு செய்து, யாழ்நகரின் பிரபல சுருட்டு முதலாளியும், யாழ். மாநகரசபையின் கூட்டணி உறுப்பினருமான குமாரவேல் தலைமையில் முதலாளிகளினதும் நலன்களைப் பாதுகாப்பதற்காக ஒரு சங்கம் உருவாக்கப்பட்டு, அதன் மூலம் 40 ரூபா சம்பளம் வழங்குவதென தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி இச்சங்கத்தை, தமிழ்ஈழ சோஷலிசக் குடியரசை உருவாக்குவதற்காகப் ''போராட்டம் நடத்தும்'' வண்ணை ஆனந்தன் அங்குரார்ப்பணம் செய்து வைத்துள்ளார். தொழிலாளர்களையும், முதலாளிகளையும் பாதிக்காத இச்சம்பள உயர்வு என அறிக்கைமூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வளவுதான் கூறப்பட்டாலும் சுருட்டு முதலாளிகள் எடுக்கும் முடிவு தொழிலாளர்களுக்கு எதிரானதாகவே இருக்கும். ஏனெனில் இது வரை காலமும் சுருட்டுத் தொழிலாளர்களின் இரத்தத்தை உறிஞ்சிக் கொழுத்தவர்கள் இன்று தொழிலாளர்களுக்காக ஒரு சங்கம் அமைத்துச் சேவைசெய்வது உண்மையில் ஆட்டுக்குட்டிக்காக ஓநாய் பரிந்துரைத்த கதையைத்தான் நினைவூட்டுகின்றது. இவ்வாறான ஏமாற்றும் இசைநிருப்பதிலும்தான் கூட்டணியின் பிரமுகர்கள் என்பதையும், இப்பேற்பட்டவர்களின் நடைமுறையும் இன்று சுருட்டுத் தொழிலாளர்கள் மிகவெளிச்சத்தில் காணக்கூடியதாக உள்ளது.

★

## நேபாள மன்னரின் உறுதியான குரல்

அண்மையில் இலங்கை விஜயம் செய்த நேபாள மன்னர் பிரேந்திரா நமது நமது நாட்டின் ஜனாதிபதியுடனும், அரசாங்கத் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தைகளை நடாத்தினார். இப் பேச்சுவார்த்தைகளின் போதும், விருந்துபசாரத்தின் போதும் ஆசிய விவகாரங்கள் பற்றியும், உலக விவகாரங்கள்பற்றியும் தனது உறுதியான நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினார். உலக சமாதானத்தின் அவசியத்தையும், வல்லரசுகளின் கெடுபிடிகளையும் குறிப்பிட்ட அவர் கம்பூச்சியாவில் இருந்தும் ஆப்கானிஸ்தானிலிருந்தும் அந்நியப் படைகள் உடனடியாக வெளியேற வேண்டுமெனவும் வலியுறுத்திருந்தார். இறுதியாக இலங்கை — நேபாளக் கூட்டறிக்கையில் ஆப்கானிஸ்தானிலிருந்து சோவியத்படைகள் உடன் வெளியேறவேண்டும் எனக் கூறப்பட்டிருந்தது. நேபாள மன்னரினதும் அவரது அரசாங்கத்தினதும் கம்பூச்சியா, ஆப்கான் நிலைமைகள்பற்றிய தெளிவான முடிவானது நமது நாட்டிற்கு மிக அவசியமானதாகும். அரசாங்க மட்டத்திலும் — வேறுசில கட்சிகள் மட்டத்திலும் சோவியத்யூனியன் பற்றிய ஊசலாட்டத்திற்கு மன்னர் பிரேந்திராவின் கூற்றுக்கள் நிச்சயம் ஒரு நிதானத்தைக் கொடுக்கும் என நம்புகின்றோம்.

★

## உலக அரங்கில்...

3-ம் பக்கத் தொடர்ச்சி

பகுதியில் சோவியத் வெளிநாட்டு அமைச்சர் குரோமிகோ இந்தியா வந்திருந்த போது எள்ளளவேனும் சமரச நோக்கின்றி 'இந்திய-சோவியத் நடவடிக்கைகள் முற்றாக அதிகரிக்க வேண்டும்' என்ற போக்கில் பேசிச்சென்றார். அதுமட்டுமல்லாது இந்தியாவில் இருந்த வேளையில் அயல்நாடுகளையும் கண்டித்தும் பேசினார். நடுநிலைமையையும் பேசிக்கொண்டு, சோவியத்சார்பான கொள்கையையும் கடைப்பிடிப்பது இந்தியாவுக்குச் சிரமமான காரியமாக இருக்கப்போகிறது.

## ● மலையகச் செய்திகள்

## பாடசாலைகள் கையளிப்பு நிறுத்தப்படுமா?

தோட்டப் பாடசாலைகளை அபிவிருத்திச் சங்கங்களிடம் கையளிப்பது என்ற போர்வையில் தோட்ட நிர்வாகங்களிடம் கையளிப்பதற்கான ஒரு சூழ்ச்சித் திட்டத்தை அரசாங்கம் வகுத்தது. தோட்டப் பாடசாலைகள் மீண்டும் தோட்டத் துரைமாரின் கைகளுக்குச் சென்றால் தோட்டச் சிறார்களின் கல்விக்கு பெரும் ஆபத்து ஏற்படும் என்பதை விளக்கி இலங்கை தேசபக்த வாலிபர் இயக்கத்தின் மலையகக் கமிட்டி ஒரு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டது. அதேபோல் மலையக மக்களினதும் அவர்களினது சிறார்களின் கல்வியில் அக்கறைகொண்ட தொழிற்சங்கங்களும், பொது ஸ்தாபனங்களும் எதிர்ப்புக்குரல் கொடுத்தன. இந்த எதிர்ப்புக் குரல்களும் கண்டனங்களும் அரசாங்கத்தைக் கட்டிக்காத்துவரும் தொண்டமான் காதிலும் உறைக்கவே செய்துள்ளதுபோல் தெரிகின்றது. அவரை ஆதரிப்போர் மத்தியிலேயே இப்பாடசாலைகள் கைமாறும் விடயம் பலத்த எதிர்ப்பையும் அதிருப்தியையும் தோற்றுவித்துள்ளது. எனவே அண்மையில் தொண்டமான் தோட்டப் பாடசாலைகள் தோட்ட நிர்வாகங்களிடம் ஒப்படைக்கப்படமாட்டாது என உறுதி கூறியுள்ளார். அவரது கூற்றை அரசாங்கம் என்ன செய்யப்போகின்றது என்பதே கேள்வியாகும். அரசுதான் எடுத்த முடிவை அமுல்படுத்துமா? அல்லது கைவிடுமா? எம்மைப் பொறுத்தவரை தொண்டமானை நம்பியோ அல்லது அரசை ஆதரித்தோ மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாது அதற்குப்பதிலாக மக்களை எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உறுதியான எதிர்ப்பியக்கத்தை மக்கள் ஐக்கியப்பட்டு முன்னெடுப்பதே சரியான மார்க்கமாகும்: தோட்டப் பாடசாலைகள் கைமாற்றப்படுவதற்கு எதிராகத் தொடர்ந்தும் இயக்கங்களை நடாத்துவதே சரியானதாகும்.

## தோட்டங்களில் இருந்து விரட்டல்!

மலையகத் தோட்டங்களை அரசு பொறுப்பேற்ற பின் காலத்திற்குக் காலம் சில தோட்டங்களைப் பிரித்து நிலமற்றவர்களுக்கு வழங்கி வரும் முறை கையாளப்படுகின்றது. இது கடந்த அரசாங்க காலத்தின்போதும், இன்றும் நடைபெறுகின்றது. இவ்வாறு நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்கப்படும்போது தனியே சிங்கள மக்களுக்கு மட்டுமே வழங்கப்படும் முறை கடைப் பிடிக்கப் படுகின்றது. நிலமற்ற சிங்கள மக்களுக்கு நிலம்வழங்குவது முற்றிலும் நியாயமானதும் சரியானதுமாகும். அதேவேளை பல பத்து ஆண்டுகளாக தமது வியர்வையையும், இரத்தத்தையும் அதே தோட்டங்களுக்கு உரமாக இட்டு உழைத்த தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒரு துண்டு நிலம்தானும் கொடுபடவில்லை என்பதே சுட்டிக்காட்டப்பட வேண்டியதொன்றாகும். இலங்கைப் பிரஜைகளாகிவிட்ட தோட்ட தொழிலாளர்கட்கு இவ்வாறு பிரித்துக் கொடுக்கப்படும் தோட்ட நிலமோ' வீடோ கொடுக்கப்படுவதில்லை. இது எவ்வளவு நியாயமற்ற இந்நடவடிக்கையால் பிரித்துக் கொடுபடவுள்ள தோட்டங்களில் பல்லாண்டு காலம் வாழ்ந்த பாட்டாளிகள் திக்கற்றவர்களாக வீதியில் நிற்கவேண்டிய நிலைக்கு ஆளாகின்றனர். ஒரிரு தமிழர்களுக்கு நிலம்வழங்கப்பட்டாலும் அவர்கள் தோட்டத் தொழிலாளர்களாக இருக்கமாட்டார்கள். பதிலாக அவர்கள் கடை முதலாளிகளாகவோ அல்லது ஆட்சியின் பந்தங்களாகவோதான் இருப்பார்கள். அரசாங்கம் தோட்

4-ம் பக்கம் பார்க்க

## சிந்திக்கவேண்டிய செய்திகள்

★ இன்று வாழ்க்கைசெலவு அதிகரித்து வருகின்றன. அதற்கேற்றளவு சம்பள உயர்வு வழங்கப்படுமா? என்று பாராளுமன்றத்தில் ஒரு அரசாங்க எம். பி. கேள்வி எழுப்பினார். ஆனால் அவரது கேள்விக்குப் பதில் கொடுபடவில்லை.

★ இ. போ. ச. வில் வேலை செய்வோருக்கு எதிர்வரும் ஏப்பிரல் மாதத்தில் சம்பள உயர்வு வழங்கப்படுமாம். அச்சம்பள உயர்வு ஆகக்கூடிய தொகை 250 ரூபாவாகவும் ஆகக் குறைந்த சம்பள உயர்வு 45 ரூபாவாகவும் இருக்குமாம். உதாரணமாக ஏற்கனவே 2500ரூபா மாத வருமானம் பெறும் அதிகாரிக்கு அடிப்படைச் சம்பளத்தில் 250ரூபா கூட்டி வழங்கப்படும். அதாவது அவர் 2750 ரூபா பெறுவார். அதேவேளை தற்போது 240 ரூபா சம்பளம் பெறும் ஒரு தொழிலாளிக்கு ரூபா 45 மட்டும் கூட்டி வழங்கப்படும். அதாவது அத்தொழிலாளி 285 ரூபாவைப் பெறுவர். (ஆனால் அவரது உணவு முத்திரையைப் பறிப்பதற்காக அவருக்கு 310ரூபா வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது) நமது நாட்டின் சமூக அமைப்பில் அதிகாரிக்கும் தொழிலாளிக்கும் உள்ள சம்பள வித்தியாசத்தின் இடைவெளி இதுவேயாகும். ஆனால் இருவரும் இந் நாட்டின் 'சுதந்திர மனிதர்களேயாவர்'.

★ நமது நாட்டின் பெரும் பகுதி மக்கள் வாழ்வது கிராமப்புறங்களிலேதான் இவர்களில் 5வீதத்தினருக்கு மட்டுமே சுத்தமான குழாய்நீர் கிடைக்கின்றது. மிகுதி 95 வீதமான கிராம மக்கள் அருந்துவது அசுத்த நீரேயாகும்.

— பிரதமர் பிரேமதாச

**மக்களின் துன்பதுயரங்களுக்கு அடிப்படைக் காரணம் இன்றைய சமூக அமைப்பேயாகும்!**

# எண்ணெய் விலையை உயர்த்துவோர் யார்?

இப்பொழுது முதலாளித்துவ அரசாங்கங்கள் பலவற்றை எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிகளை நியாயப்படுத்தும் வகையில், அரசியல்வாதிகள் எரிபொருள்விலை அதிகரிப்பைக் குறிப்பிட்டு வருகின்றனர். நமது நாட்டிலும் இப்போக்கினைக் காண்கிறோம். பொதுவில் எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளின்மீது பழிசுமத்தப்படுவதையும் நாம் அடிக்கடி கேட்கிறோம். உண்மையில் கூர்ந்து நோக்கினால், எண்ணெய் ஏற்றுமதிசெய்யும் நாடுகள்மீ நாம் அனுதாபம் கொள்ள வேண்டியிருக்கும். ஏனெனில் மிகச் சமீபகாலம் வரையில எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகள் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருந்துவந்துள்ளன. பெரும்பாலான எண்ணெய் ஏற்றுமதி நாடுகளில் அது ஒன்றே பிரதான ஏற்றுமதிப் பொருளாகவும் இருக்கிறது. ஏகாதிபத்திய நாடுகளைச் சேர்ந்த மாபெரும் கம்பெனிகள் –குறிப்பாக பன்னாட்டுக் கூட்டுத்தாபனங்கள் — எண்ணெயை மிக மலிவாகவே பெற்றுவந்தன. நீண்ட கால ஒப்பந்தங்கள் செய்யப்பட்டமையால் ஏற்றுமதி நாடுகள் வெகு மலிவாக விற்க வேண்டிய நிலையில் இருந்தன. ஒருசில வருடங்களுக்கு முன்கூட, அமெரிக்கா ஒரு கலன் பெட்ரோலை ஒரு (இலங்கை) ரூபாவிற்கு வாங்கக்கூடியதாக இருந்தது. உண்மையில் இங்கிலாந்து, ஒல்லாந்து தேசம், இத்தாலி, அமெரிக்கா, பிரான்ஸ் முதலிய கைத்தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகளில் இயங்கும் தனியார்துறை எண்ணெய்க் கம்பெனிகள், மசகு எண்ணெயைப் பெருமளவில் பெற்று தமது நாடுகளில் அதனைச் சுத்திகரித்து பெட்ரோலியப் பொருட்களாக்கி உலகச் சந்தையில் விற்றுப் பெரும் இலாபம் சம்பாதித்து வருகின்றன.

அண்மையில் எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகள் சங்கத்தின் பிரதிநிதியொருவர் கருத்துத் தெரிவிக்கையில், இன்றும் தமது சங்கத்தைச் சேர்ந்த நாடுகள் மொத்த உற்பத்தியில் ஏழு சதவீதத்தையே சுத்திகரிக்கப்பட்ட எரிபொருளாக விற்கக் கூடிய நிலையில் இருக்கின்றன என்றும், எஞ்சிய தொண்ணூற்றுமூன்றுவீதம் மசகு எண்ணெயாக கைத்தொழில் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது என்றும் கூறினார். இது சிந்திக்கவேண்டிய தொன்றாகும். விலை ஏற ஏற ஏகாதிபத்திய நாடுகளிலுள்ள தனியார் கம்பெனிகள் மேலும் மேலும் தமது இலாபத்தைப் பெருக்கிக் கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. உதாரணமாக உலகின் பெரும்பகுதியிலே—சிறப்பாக வளர்முக நாடுகளிலே—கடந்த வருடத்தில் எண்ணெய் விலை ஏற்றத்தால் பல பிரச்சினைகள் தோன்றியதை யாவரும் அறிவர். ஆனால் இதே காலப்பகுதியில் அதாவது சென்றவருடம் மாத்திரம் எக்ஸொன் என்ற அமெரிக்க எண்ணெய்க் கம்பனி இருபதுகோடி டொலர் நிகர இலாபம் சம்பாதித்தது. அதாவது ஏற்றுமதி நாடுகளிடம் கூடிய விலை கொடுத்து வாங்கிய பின்னரும், மசகு எண்ணெயைஎரிபொருளாக மாற்றி விற்றதில் ஒரு கம்பெனிக்கு இத்தகைய இலாபம் கிடைத்தது என்றால் நிலைமை எத்தகையது என்பதை ஓரளவு உணரலாம். இன்னும் ரெக்ஸாகோ, மொபில், ஸ்டாண்டர்ட் ஒயில், பிலிப்ஸ் முதலிய பன்னாட்டுக் கூட்டுத்தாபனங்களும் சென்ற வருடம் என்றுமில்லாத அளவில் இலாபம் சம்பாதித்துள்ளன. ரெக்ஸாகோ என்ற அமெரிக்க நிறுவனம் பதினைந்து கோடிக்கு மேற்பட்ட இலாபம் பெற்றிருக்கிறது.

நாம் முன்னர் இப்பகுதியில் சுட்டிக் காட்டியிருந்தது போல, மேற்கத்திய ஏகாதிபத்திய நாடுகள் செய்வதைப் போலவே சமூக ஏகாதிபத்திய நாடான ரஷ்யாவும் எரிபொருள் ஏற்றுமதியில் பெரும் இலாபம் சேகரித்த வருகிறது. இவற்றை நோக்கும்பொழுது எய்தவன் இருக்க அம்பை நோவதுபோல, பலர் எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளில் பழியைச் சுமத்துவது பொருத்தமற்றதாகும். ஏகாதிபத்தியம் எப்பொழுதும், எங்கும் பின்தங்கிய நிலையிலுள்ள நாடுகளிலிருந்து மூலப்பொருட்களை மிகக் குறைந்த விலைக்குப் பெற்று, அவற்றைத் தனது தொழில் நுட்பத்தினால் மினுக்கி மெருகூட்டி உலகச்சந்தையில் மீண்டும் ''உயர்'' பொருளாக விற்றுக் கொள்ளை இலாபம் அடிக்கிறது. எரிபொருளைப் பொறுத்தவரையிலும் இப்பொழுது விதி முற்றிலும் பொருந்துவதாகவே உள்ளது.

★

## கைத்தொழில் நாடுகளின் கபடத்தனம்!

ஏகாதிபத்திய நாடுகளைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது அண்மையில் (வைரி-பெப்ர ரி) புதுடில்லியிலே நடந்தேறிய யூனிடோ மகாநாட்டைப்பற்றிச் சொல்லவேண்டியுள்ளது. ஐ.நா.வின் ஆதரவில மூன்றுவது மண்டல நாடுகளின் கைத்தொழில் வளர்ச்சிக்குத் துரித மார்க்கங்கள் காணும்பொருட்டு அவ்வப்போது கூடும் மாநாடு இதுவாகும். அண்மையில் நடந்தேறியது மூன்றுவது ஆகும். இதற்கு முந்திய மாநாடு லத்தீன் அமெரிக்க நகரான லிமாவில் நடந்தது. இம்மாநாடுகளில் வளர்முகநாடுகளின் துரித வளர்ச்சிக்காகப் பல திட்டங்கள் தீட்டப்படுவதுண்டு; விவாதிக்கப்படுவதுண்டு. புதிய சர்வதேச பொருளாதார அமைப்பைப பற்றிப் பெரும் பேச்சுக்கள் பேசப்படுவதுண்டு. அபிவிருத்திநிதி ஒன்று ஆரம்பிக்கப்படவேண்டியதன் அவசியம் வற்புறுத்தப்படுவதுண்டு. ஆனால் உருப்படியாக ஒன்றும் நடைபெறுவது கிடையாது. சாதனை சூனியமே.

அடிப்படையில் வளர்முக நாடுகள் பல இடைவிடாது விடுக்கும் வேண்டுகோள்கள் இரண்டுதான். கைத்தொழில் முன்னேற்றம் கண்டுள்ள நாடுகள் வளர்முகநாடுகளுடன் தமது தொழில்நுட்ப அறிவையும், திறமைகளையும், சாதனங்களையும் பகிர்ந்துகொள்ள வேண்டும். மற்றது தாம் சம்பாதிக்கும் பெரும் இலாபங்களில் ஒரு சிறுவீதத்தை வளர்முகநாடுகளின் அபிவிருத்திக்கு உதவுதல். இவ்விரண்டும் நடந்தால வளர்முக நாடுகள் வளர்ச்சிப்பாதையில் முன்னேறமுடியும். புதுடில்லி மாநாட்டிலும் மூன்றுவதுமண்டல நாடுகள்குழு இவ்வடிப்படைக் கோரிக்கையை ஆதாரமாகக் கொண்டே தமது தீர்மானங்களைத தயாரித்திருந்தன. ஆயினும் ஏறத்தாழ மூன்றுவாரகால மாநாட்டின் முடிவில் எவ்வித உடன்பாடுகளும இல்லாமலே பிரதிநிதிகள தத்தம் நாடுகளுக்குத் திரும்பினர்.

மாநாட்டு அமைப்புக் குழுவுக்கு தலைமை வகித்த இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. நரசிம்மராவ் இறுதி நாளன்று சமரசத்திட்டம் ஒன்றைச் சமர்ப்பித்து உடன்பாடு காண முயன்றார். ஆயினும் பயன் ஏற்படவில்லை.

மாநாடு எதிர்பார்க்கக் கூடியவிதத்தில் இருபெரும் கூறுகப் பிளவுபட்டே நடைபெற்றது. வளர்முக நாடுகள் ஒருபுறம்; கைத்தொழில் நாடுகள் மறுபுறம். தொழில்நுட்பப் பரிமாற்றம், நிதியுதவி என்ற கோரிக்கைகளுக்கு மாறாக, கைத்தொழில் நாடுகள், சுதந்திரவர்த்தகம், தொழிற்பாகுபாடு, கடன்வழங்கல், போட்டி முறையிலான வளர்ச்சி என்பனவற்றை வற்புறுத்தின. அதாவது பின்தங்கிய நாடுகள் தொடர்ந்தும் பின்தங்கிய நாடுகளாக இருப்பதையே ஏகாதிபத்திய நாடுகள் விரும்புகின்றன என்பது வெளிப்படை.

உலகவங்கி, சர்வதேச நாணயநிதி, ஆசிய அபிவிருத்தி வங்கி முதலிய பன்னாட்டு இராட்சத வங்கிகள் இருக்கும்வரை யூனிடோ, அங்ராட், ஆகிய மாநாடுகள், வெறும் பட்டிமன்றங்களாகவே இருக்கமுடியும். இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை எங்காவது ஒரு தலைநகரிலே பிரதிநிதிகள் கூடிச் சிலவாரங்களைக் கழித்துவிட்டுத் தத்தம் தேசங்களுக்குத் திரும்பவேண்டியதுதான். புதுடில்லி மாநாட்டில் இலட்சியபூர்வமான பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்நூற்றாண்டின் முடிவில், அதாவது இரண்டாயிரமாவது வருடமளவில், மூவாயிரம் கோடி டொலர்நிதி சர்வதேசரீதியாகத் தேவைப்படும் என்றும், தங்குதடைகளின்றி நாடுகளுக்கிடையே தொழில்நுட்பத்திறன் பரிமாற்றம் செல்லப்படவேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. நல்லது. ஆனால் யார் பூனைக்கு மணியைக் கட்டுவது?

வளர்முகநாடுகளின் இயல்பான நண்பர்கள் என்று தம்மைத்தாமே வருணித்துக் கொள்ளும் சோவியத் முகாம் நாடுகளும் பேச்சளவில் தவிர அன்றி, உண்மையான உதவிக்கு உற்சாகம் காட்டவில்லை எனம்பதான் வளர்முக நாடுகள், மாநாட்டிலே ஒன்றன் பின் ஒன்றாக தீர்மானங்கள் பிரேரிப்பதுடன் திருப்தியடையவேண்டிய நிலையிலேயே உள்ளன. தலைவர் மாஓ மூன்றுலகக் கோட்பாட்டை விளக்கியபொழுது கூறியதைப்போல, மூன்றுவது உலகத்தைச் சேர்ந்த நாடுகள், தமது ஒற்றுமையாலும், ஒருமைப்பாட்டாலுமே சிற்சில பொருளாதார விடுதலைகளையும் வளர்ச்சியையும் காணமுடியும். தற்சார்புக் கொள்கையும், சிறிய நாடுகளின் ஒற்றுமையும் புதுடில்லி மாநாட்டில் வற்புறுத்தப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கதாகும்.

★

## கியூப-ஆளும் கும்பலுக்கு உள்நாட்டிலும் கடும் எதிர்ப்பு!

முந்திய தடவை இப்பகுதியில் கியூபா தேசத்தைப்பற்றிக் குறிப்பிட்ட பொழுது அங்கே அதிகரித்துவரும் எதிர்ப்புக் குரல்களைச் சுட்டிக் காட்டியிருந்தோம். அண்மையில் கியூபாவிலே இருதடவைகள் மந்திரிசபை மாற்றி அமைக்கப் பட்டிருக்கிறது. அதேவேளையில் ''தயங்கித் தடுமாறும்'' நபர்கள் என வருணிக்கப்படுபவர்கள் ஆயிரக்கணக்கில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சில தினங்களுக்குள் மூவாயிரத்திற்கும் அதிகமானோர் சிறைச்சாலைகளுக்கு அனுப்பப்பட்டனர் என பத்திரிகை நிருபர்கள் கூறியுள்ளனர்.

## உலக அரங்கில் — அங்கும் இங்கும்

அமைச்சரவை மாற்றமும் அடக்குமுறைகளும் கியூபாவில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியின் விளைவுகளே என்பதை இலகுவில் அறிந்து கொள்ளலாம். சோவியத் எஜமானர்களின் கைப்பொம்மைகளாகவும், கூலிப்படைகளாகவும், எடுபிடி ஆட்களாகவும் இயங்குவது, பொருளாதார அடிமைகளாகச் செயற்படுவது கியூபாவில் பலருக்கு உடன்பாடில்லை. எனவேதான் ஹவானாவில் இப்பொழுதெல்லாம் மிகச்சாதாரணமாகவே கஸ்டிரோ எதிர்ப்புத் துண்டுப் பிரசுரங்களும் சுலோகங்களும் காணப்படுவது சகஜமாகிவிட்டதாம். இத்தகைய நெருக்கடி சூழ்ந்த நிலையிலேயே கஸ்டிரோ பலருக்குப் பதவி இறக்கங்களைக் கொடுத்திருக்கிறார். கஸ்டிரோ அவர்கள் மேலதிகமாக நான்கு அமைச்சுக்களின் பொறுப்பை தானே ஏற்றுக்கொண்டிருப்பது தலைமைப்பீடத்தில் உண்டாகியிருக்கும் சிக்கல்களை எடுத்துக்காட்டுகிறது என்பதில் ஐயமில்லை. உதவிப் பிரதமரான ரொட்றிக்ஸ் என்பவரும் பல மேலதிக அமைச்சுக்களின் பொறுப்பைக் கையேற்றிருக்கிறார். இவைகள் யாவும் கியூபா எதிர்நோக்கும் நெருக்கடியை வெளிப்படுத்தியுள்ளன.

இதே வேளையில் மூன்றுவது மண்டல நாடுகள் பலவற்றிலே கியூபாவின் பாத்திரம் பற்றியதான பாரதூரமான சந்தேகங்கள் தோன்றியிருக்கின்றன. தற்சமயம் கியூபா அணிசேரா இயக்கத்தின் சம்பிரதாயபூர்வமான தலைமைப் பதவியை வகித்து வருவது யாவரும் அறிந்ததே. அப்பதவியைப் பயன்படுத்தி ரஷ்யாவுக்குஆதரவானசெயல்களைப் புரிந்துவருவது பல நாடுகளின் கோபத்தைத் தூண்டியிருக்கிறது. உதாரணமாக சமீபத்திலே பிலிப்பைன்ஸ் பத்திரிகை ஒன்று இதுபற்றி பின்வருமாறு எழுதியுள்ளது.

''அண்மையில் இஸ்லாமாபாத்தில் கூடிய இஸ்லாமிய வெளிநாட்டமைச்சர்கள் மாநாட்டில், ஆப்கானிஸ்தானிலிருந்து ரஷ்யப்படைகள் வெளியேற வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப் பட்டதுமன்றி, எதியோப்பியாவிலிருந்து (சோவியத்) கியூபப் படைகள் வெளியேற வேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேறப்பட்டது. ஏற்கனவே அணிசேரா இயக்கத்தைச் சேர்ந்த நாடுகள் மத்தியில், கியூபா தனது நடுநிலைமைத் தகைமையை இழந்து விட்டது. இவ்வருடம் பாதுகாப்புச் சபைக்கு கியூபா ஐ.நா.வில் தெரிந்தெடுக்கப்படாமைஇதனாலேஎன்பதை யாவரும் அறிவர். அணிசேரா இயக்கத்தின் உள்ளே அதன் எதிர்காலம் பற்றிப் பல கருத்துக்கள் உருவாகியுள்ளன. இயக்கத்தின் இணைப்புப் பணியகத்தை உடனடியாகக்கூட்டி இன்றைய உலகநிலையை விவாதித்து ஒரு தீர்க்கமான முடிவுகளுக்கு வருவது விரும்பத்தக்கது என்பதே பல நாடுகளின் அபிப்பிராயம். ஆனால் தலைமைப் பதவியைப் பயன்படுத்தி பணியகக் கூட்டத்தைப் பின்போட்டு வருகிறது கியூபா. சிறிது காலத்திற்குக் கூட்டத்தைப் பின்போடலாம். ஆனால் எத்தனை நாளைக்கு? சோவியத் நலன்களைப் பாதுகாப்பதற்காக கியூபா அணிசேரா இயக்கத்தைப் பாவித்துத் திசை திருப்புகிறது என்ற அப்பட்டமான உண்மை உலகிற்கு வெட்டவெளிச்சமாகிவிடும்.''

பிலிப்பைன்ஸ் பத்திரிகையின் மேற்கூறிய கருத்து மூன்றுவது உலகநாடுகளில்வாழும் இலட்சக்கணக்கான சிந்திக்கும் மக்களின் கருத்தை ஒத்ததாகவே இருக்கிறது என்பதில் எதுவித ஐயமுமில்லை

★

## சோவியத் துதி பாடும் இந்தியா

இந்திராகாந்தி பதவியேற்றதிலிருந்து சோவியத் நிலைப்பாட்டைக் கண்டிப்பதைவிட்டு, பிராந்திய அமைதிக்கும் உறுதிப்பாட்டுக்கும் முயலுவதாகக்கூறி நடைமுறையில் தனது அடிப்படையான சோவியத் ஆதரவை வெளிப்படுத்தியிருக்கிறார். ஆயினும் சென்றமாதம் முற்

(2-ம் பக்கம் பார்க்க)

**சோவியத்-அமெரிக்க மேலாதிக்கப் போட்டிக்கு எதிராக மக்களே ஒன்றுபடுங்கள்!**

செய்திப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# மாவட்ட அபிவிருத்தி சபையும் - தமிழ் மக்கள் பிரச்சினையும்

கடந்த வருடம் நடுப்பகுதியில் வடபகுதிக்கு அவசரகாலச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டு அங்கு ''பயங்கரவாதத்தை'' ஒழிப்பதற்கு ஒரு இராணுவப் பிரிவும் ஜனாதிபதி அவர்களால் அனுப்பி வைக்கப்பட்டது. ஜனாதிபதி தனது பணிப்புரையில் 1979 ஆம் ஆண்டு டிசம்பர் முப்பத்தியோராம் திகதியை பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான இறுதித் திகதியாகவும் குறுப்பிட்டிருந்தார். அரசாங்கத்தின் மேற்படி நடவடிக்கை தமிழ்மக்கள் மத்தியிலும் நாட்டின் ஜனநாய, முற்போக்கு, புரட்சிகர, தேசபக்த சக்திகளின் மத்தியில் பெரும் அதிருப்தியையும் கண்டனங்களையும் தோற்றுவித்தது. இவற்றுக்கு மாற்று நடவடிக்கையாக ஜனாதிபதி ஒரு ஆணைக்குழுவை நியமித்துத் தமிழர் பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்படுத்தப்போவதாக தெரிவிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழுவில் தமிழர் கூட்டணியின் சார்பாக திரு. நீலன் திருச்செல்வம் நியமிக்கப்பட்டார். பேராசிரியர் வில்சன் அவர்களும் நியமிக்கப்பட்டு வேறும் பல்வேறு உயர்மட்டச் சிங்கள — முஸ்லீம் பிரமுகர்களும் அக்குழுவில் இடம்பெற்றனர், இந்த ஆணைக்குழுவும் டிசம்பர் முப்பத்தொன்றுக்குமுன் தனது அறிச்கையை ஜனாதிபதியிடம் கையளிக்கவேண்டும் எனவும் கூறப்பட்டிருந்தது.

முதல் கூறிய ''பயங்கரவாதம்'' குறிப்பிட்ட திகதியில் ஒழிக்கப்பட்டுவிட்டதாம் ஆனல் இரண்டாவதான ஆணைக்குழு அறிக்கை கடந்த வாரமே ஜனாதிபதியிடம் கையளிக்கப் பட்டுள்ளதாம். அந்த அறிக்கையில் திரு. நீலன் திருச்செல்வம் பங்கு கொள்ளாது தான் தனி அறிக்கை கொடுக்கப்போவதாகவும் பேராசிரியர் வில்சனின் அறிக்கைக்குச் சில குறிப்புக்கள் கொடுக்க இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதியிடம் கையளிச்கப்பட்ட அறிக்கையை மந்திரிசபை பரிசிலனை செய்த பின்பே அது சட்ட வடிவம் பெறுமாம்.

ஆரம்பத்தில் தமிழர் பிரச்சினைக்கு ஒரு தீர்வுக்கான ஆணைக்குழு என்றே கூறப்பட்டது. ஆனல் இன்று வெளியாகியுள்ள செய்திகளின்படி அது நிர்வாகத்தை பரவலாக்குவது சம்பந்தமான ஆணைக்குழு அறிக்கை என்றே கூறப்படுகின்றது. அப்படியாயின் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு என்ற அரசாங்க வட்டாரப் பிரசாரம் அந்நேரத்திற்காக மட்டும் தயாரிக்கப்பட்ட ஒரு தற்காலிக ஏமாற்று பிரசாரமா? என்ற கேள்வி மக்கள்மத்தியில் கிளப்பப்படுகின்றது. இது கடந்த காலத்தில் யூ. என்.பி.யுடன் தமிழரசுக்கட்சி தேசிய அரசாங்கம் அமைத்த காலத்தில் தடல்புடலாகப் பிரசாரப்படுத்தப்பட்ட மாவட்ட சபைப் பிரசாரத்தையே ஞாபகத்திற்கு கொண்டு வருகின்றது.

உண்மையில் யூ. என். பி.யோ அல்லது தமிழர் கூட்டணியோ தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாத கட்சிகள் என்பதையும் மொத்தத்தில் எல்லாம் வெறும் ஏமாற்றுக்கள் என்பதையுமே எடுத்துக்காட்டுகின்றன.

## 1-ம் பக்கத் தொடர்ச்சி இலங்கை பற்றிப் பேச

நாம் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவெனில் எவராயினும் எப்படியாயினும் ஒரு நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினை சம்பந்தமாக வெளிநாடுகளுக்கு மகஜர் கொடுக்கலாம் அல்லது பிரச்சினைகள் பற்றி எடுத்துக் கூறலாம். அதைப்பற்றி எமக்கு ஆட்சேபமில்லை, ஆனல் அம்மகஜரைப் பெற்றுக் கொண்ட நாடோ அதன் தலைவரோ அப்பிரச்சினைபற்றி கொண்டுள்ள கண்ணோட்டம்பற்றியே நாம் அதிக அக்கறை கொள்ளல் வேண்டும். இலங்கையை இரண்டாகப்பிரிக்கும் ஒரு இயக்கத்திற்கு அல்லது அதன் பிரநிதிக்கு இந்திரா காந்தி ஆதரவு தெரிவிப்பது அல்லது அதற்கு அனுசரணை காட்டுவது எமது நாட்டின் உள் விவகாரத்தில் தலையிடுவதையே உணர்த்துகின்றது. அவ்வாறு இந்திராகாந்தி தலையிடுவார் என்ற நிலைக்கு அவரது சர்வதேசக் கண்ணோட்டமும் ஆதரவாக உள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக அவரது சோவியத் சமூக ஏகாதிபத்திய ஆதரவுக் கொள்கை அவர்மீதுள்ள சந்தேகத்தை வலுப்படுத்துகின்றது. அண்மையில் கூட ஆபகானிஸ்தான் மீது சோவியத் ஆக்கிரமிப்புச் செய்துள்ளதை ஆதரிப்பதிலும் அதற்கு சப்பை கட்டுவதிலுமே தனது நேரத்தை இந்திராகாந்தி செலவழித்துவருகிறார். இப்படியான ஒருவர் இலங்கை மீது தலையிடமாட்டாரென யாரும் நம்பிவிட முடியாது. இலங்கையின் பிரிவினைவாதிகள் இந்திராகாந்தியைப் புகழ் பாடும் அதே வேளை சோவியத் ஆதரவுக் கொள்கையைப் பின்பற்றுவதும் தற்செயலானவை அல்ல. அன்று வங்காள தேசத்திற்குள் படை அனுப்பியதும், சிக்கிமைத் தம்முடன் பலவந்தமாக இணைத்துக் கொண்டதும் பூட்டானை இறுக்கி வைத்திருக்க முயலுவதும் சோவியத் ஆதரவுடன் இந்திராகாந்தியால செய்யப்பட்டவையேயாகும். எனவே அதே சோவியத் ஆதரவுடன் இந்திராகாந்தி இலங்கையின் மீது தனது பார்வையைத் திருப்பி கைகளை வைக்க முயலமாட்டார் என நாம் நம்புவதற்கில்லை. 'இந்திரகாந்தியே இலங்கைமீது கைவையாதே' என்ற தேசபக்த கோஷத்தை முன்கூட்டியே நாம் உறுதியாக முன்வைக்க விரும்புகின்றோம்.

## 1-ம் பக்கத் தொடர்ச்சி மக்களை வாட்டி வதைக்கும் யூ. என். பி. தான் யாரென்பதை மக்களுக்கு அம்பலமாக்கியுள்ளது!

நிர்ப்பந்திப்பதிலும் கட்டுப்பாடுகள் விதிப்பதிலும், முழுமூச்சாக ஈடுபடுகின்றன. இதை எதிர்ப்பதற்கு ஒரு வளர்முக நாடு தனது சுயசார்புக்கொள்கையில் கால் ஊன்றி நின்றால் அன்றி தாக்குப் பிடிப்பது கடினமானதேயாகும். நமது நாட்டின் அதிகாரத்தைப் பெற்றுள்ள யூ. என். பி. தேசிய அபிலாஷைகளுக்கும், மக்களின் அடிப்படை நலன்களுக்கும் எதிராகவே செயல்படுகின்றது. அது விதேசிய ஏகபோக முதலாளித்துவ சக்திகளுக்கும் உள்நாட்டில் பெருமுதலாளித்துவ சக்திகளின் அபிலாஷைகளையும் மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்தி வருகின்றது. அதற்கான பொருளாதாரக் கொள்கைகளையே பின்பற்றுகின்றது. இதனல் முதலாளித்துவ நாடுகளின் சகல நெருக்கடிகளையும் வெவ்வேறு வடிவங்களில் நமதுநாடு இறக்குமதி செய்கின்றது. எனவே தாராள இறக்குமதிக் கொள்கையும் கட்டுப்பாடற்ற ஏகபோக வியாபாரக் கொள்கையும், நமது நாட்டை ஏகபோக முதலாளிகளின் வேட்டைக் காடாக்கியுள்ளது. இங்கே வேட்டையாடப் படுபவர்கள் உயர்ந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். இந்நாட்டின் ஏழைப் பெரும்பான்மையான உழைக்கும் மக்களேயாவர்.

இன்று இலட்சரூபாவிற்கு மேற்பட்ட ஆடம்பரக் கார்கள் தொடங்கும் நூறு ரூபாவிற்கு மேல் விற்பனையாகும் விளையாட்டுப் பொம்மைகள் வரை இறக்குமதி செய்யப்பட்டு காட்சிக்கூடங்களில் வைக்கப்பட்டுள்ளன. அதேபோல் வெண்காயம், மிளகாய் போன்ற உணவுப் பொருட்களின் உற்பத்தியை நாசப்படுத்தும் விதத்தில் இறக்குமதி செய்கிறது அரசாங்கம். இதனல் அந்நியச் செலாவணி விரயமாகிக் கொண்டிருக்கிறது. அது மட்டுமன்றி இவ்வெண்காய — மிளகாய் இறக்குமதியில் இனரீதியான புறக்கணிப்பும் திட்டமிட்ட இனக்குரோத நோக்கமும் அரசாங்கத்திற்கு இருப்பதையே காணமுடிகிறது. எண்ணெய்விலை உயர்வின் சாட்டில் பஸ் புகையிரதக் கட்டணங்கள் கிட்டத்தட்ட ஐம்பது வீதத்தினல் உயர்த்தப்பட்டுள்ளன. விரைவில் முத்திரைகளின் விலைகளும் உயர்த்தப்படவுள்ளன

இவ்வாறு விலை உயர்வுகள் மேலும் தொடரும் என்பதையே அரசாங்கமும் அதன் தலைவர்களும் உறுதிப்படுத்தி வருகின்றனர், இவ்வளவுதூரம் விலைவாசி உயர்வுஏற்பட்டுள்ள இவ்வேளை யூ. என. பி. யின் தலைவர்கள் மக்களுக்கு கஷ்டம் இருப்பதை வாயளவில் ஏற்றுக்கொண்டாலும் மக்களின் கஷ்டத்திற்கான தனது தவறான பொருளாதாரக் கொள்கையை மாற்ற முடியாது எனவும் அது சரி என்றும் வாதிடுகின்றனர் அபிவிருத்தி என்று பெரும் பிரசாரம் செய்யப்படும் அதே வேளை அபிவிருத்தியானது ஆமைவேகத்தில் உள்ளது. அரசாங்கத்தின் மேற்படி பொருளாதாரக் கொள்கையும் அதன் விளைவான விலைவாசி உயர்வும் உழைக்கும் மக்களின் பல்வேறு வர்க்கப் பிரிவினரையும் வாட்டிவதைக்கின்றது. ஆனல் பெருமுதலாளிகளும் பெருநிலச்சொந்தக்காரர்களுமான உயர்ந்த வர்க்கத்தினரான சிறு பகுதியினர் மட்டும் மிகுந்த சந்தோஷத்துடனும் செல்வாக்குடனும் வாழக்கையை நடத்துகின்றனர்.

அரசின் தனிக்காட்டு ராஜாப் போக்கில் ஊழல், லஞ்சம் வீண்விரயம் நாடு கண்டிராத அளவுக்குத் தலைவிரித்தாடுகின்றன. அவை இன்றைய தார்மீக ஆட்சியில் மதிப்புப் பெற்று விளங்குகின்றன. இவை மேல்மட்டத்தில் இருந்துகீழ் மட்டம்வரை தமது கைவரிசைகளைக் காட்டி வருகின்றன.

எனவே இந்நிலையில் மக்களுக்கு முன்னல் ஒரேயொரு பாதை மட்டுமே உண்டு. அதுவே இன்றைய யூ. என். பி. ஆட்சியின் மக்கள் விரோதக் கொள்கைகளுக்கு எதிரான உறுதியான எதிர்ப்பு இயக்கம் முன்னெடுக்கப்படுவதேயாகும். இந்த எதிர்ப்பு இயக்கம் கட்சிகளின் செல்வாக்குத் தேடும் நோக்குடன் அன்றி, அல்லது அடுத்த தேர்தலை நோக்கமாக கொண்டிராது மக்களின் அடிப்படையான கஷ்டங்களினதும் அபிலாஷைகளினதும் அடிப்படையிலிருந்து முன்னெடுக்கப்படல் வேண்டும். இக்கடமையைக் குறிப்பிட்ட தொழிற்சங்கங்களோ கட்சிகளோ என்ற நிலையிலும் மேலாக நாட்டின் விலைவாசி உயர்வால் பாதிக்கப்பட்டுள்ள ஏக பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் அணியணியாகத் திரண்ட பரந்த எதிர்ப்பியக்கம் ஒன்றை முன்னெடுக்கத் தயாராக வேண்டும் அதுவே கஷ்டங்களையும், அரசின் திமிர்த்தனமான போக்கையும் முறியடிப்பதற்கான வழியாகும்.

2-ம் பக்கத் தொடர்ச்சி.........

டப் பங்கீட்டில் ஒரு பக்கச் சார்பாக நடந்துகொள்வதால் சில சந்தர்ப்பங்களில் சாதாரண சிங்கள—தமிழ்த் தொழிலாளர்கள் தம்முள் மோதிக்கொள்ளக்கூடிய நிலை கூட வருகின்றன. எனவே தோட்டங்கள் பகிர்ந்தளிக்கப்படும்போது தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒரு பகுதி நிச்சயம் பகிர்ந்தளிக்கப்படவேண்டும். அதேவேளை ஏனைய தொழிலாளர்களின் வேலை, இருப்பிட வசதி ஆகியவற்றிற்கான வாய்ப்பினை அரசாங்கம் எவ்வித பாகுபாடுமின்றியும் செய்து கொடுக்க வேண்டும் என்பதே நியாயமானதும். வற்புறுத்த வேண்டியதுமாகும்.

## இப்படியும் நடக்கிறதாம்

தற்போது மூன்ருவது தடவையாக உணவு முத்திரை விநியோகம் நடைபெறுகின்றது. ஆனல் முன்பின் விசாரணையின்றி பல ஏழைக்குடும்பங்களிடமிருந்து உணவு முத்திரைகள் பறித்தெடுக்கப்படுகின்றன. இதை மும்முரமாகச் செய்து வருபவர்கள்கிராம சேவையாளர்களேயாவர். தத்தமக்குத் தேவையானவர்களுக்கும், தம்மைக் கண்டு ஏதாவது 'சந்தோஷம்' செய்பவர்களுக்கும் சில கிராம சேவையாளர்கள் வருமான விசாரணையின்றி உணவு முத்திரைகளை வழங்கி வருகின்றனராம். அதேவேளை அப்பாவிகளான ஏழை மக்களை அச்சுறுத்தி வருமானவழிகளை ''கண்டுபிடித்து'' அவர்களுக்கு உணவு முத்திரைகளை இல்லாமல் செய்து விடுகின்றனர் இவ்வாறு கரிசனையோடு உணவு முத்திரை பறிப்பதற்கு அரசாங்கம் இச்சேவையாளர்கட்கு 'விசேட பட்டா' வழங்கி வருவதாகவும் மக்கள் பேசிக் கொள்கின்றனர்

1- பக்கத் தொட; மலையக...

தொழிலாளர்களின் பல சிக்கலான-கடினமான பிரச்சினைகளுக்கு ஒரேவழி மலையகத்தில் உறுதியான அரசியல் இயக்கத்தை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) தலைமையில் முன்னெடுப்பதேயாகும்.

அடுத்து தேசபக்த வாலிபர் இயக்கத்தின் மலையகக் கமிட்டியின் செயலாளர் தோழர் இ. தம்பையா உரையாற்றுகையில், 'தார்மீகம் என்ற பெயரில் நாட்டை ஆளுகின்றவர்கள் மக்களைச் சாகடிப்பதற் கேற்றளவு விலைவாசிகளை உயர்த்தியுள்ளனர், விலைவாசி உயர்வு வேலையில்லாத் திண்டாட்டம் — ஜனநாயக விரோத அடக்குமுறைச் சட்டங்கள் நாடு முழுவதற்கும் உள்ளதுபோல் மலையக மக்களுச்கும் உண்டு. எனவே மலையக மக்களும் ஏனைய மக்களோடு சேர்ந்து அரசின் மக்கள் விரோதச் செயல்களுக்கு எதிராகப் போராடுதல் வேண்டும்.

அடுத்து தோழர் சி. இராஜேந்திரன் பேசுகையில் நமது நாட்டின் மொத்த வருமானத்திற்காக வேலை வாங்கப்படும் நமது மலையகத் தொழிலாளர்கள் காலம் காலமாக மாற்ருந்தாய் மனப்பான்மையுடனேயே நடத்தப்பட்டு வருகின்றனர். அவர்களது பல்வேறு பிரச்சினைகளுக்கான தீர்வு மழுங்கடிக்கப்பட்டே வருகின்றது. எனவே திட்டமிட்டு ஒதுக்கப்பட்டு வரும் மலையக மக்கள் அனுபவரீதியாக உணரப்பட்ட போராட்டப் பாதையில் சரியான வழிகாட்டும் மார்க்கத்தில் முன்னேறவேண்டும் என்றும் கூறினார்.

அடுத்து தோழர் விஜயன் மலையகக் கல்விநிலைபற்றிக் கூறுகையில் அதன் சீர்கேடுகளையும், ஊழல்களையும் அம்பலப்படுத்தினர். தோட்டப் பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்டபோது மலையக மக்களுக்கு இருந்த நம்பிக்கை வெறும் கனவாகிவிட்டது எனவும் கூறினர்

அச்சுப்பதிப்பு: யாழ்ப்பாண அச்சகம் 93, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
வெளியீடு: சி. நவரத்தினம் 15/1, மின்சாரநிலைய வீதி மேல்மாடி யாழ்ப்பாணம்